செய்தி வெளியீடு எண் : 045 நாள் : 07.01.2023

## செய்தி வெளியீடு

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை இன்று (07.01.2023) ஆழ்வார் பேட்டை, முகாம் அலுவலகத்தில் 79–ஆவது கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெற்ற செல்வன். மு. பிரனேஷ் அவர்கள் சந்தித்து வாழ்த்து பெற்றார்.**

இன்று (07.01.2023) சென்னை, ஆழ்வார் பேட்டை, முகாம் அலுவலகத்தில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை 79–ஆவது கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெற்ற செல்வன். மு. பிரனேஷ் அவர்கள் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

பல்வேறு சாதனைகள் படைத்து 79–ஆவது கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெற்று தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ள கிராண்ட் மாஸ்டர் செல்வன். மு. பிரனேஷ் அவர்களுக்கு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் பொன்னாடை அணிவித்து, செஸ் தம்பி சிலையை நினைவுப் பரிசாக வழங்கிப் பாராட்டினார்.

செல்வன். மு.பிரனேஷ் அவர்கள் சிவகங்கை மாவட்டம், கோட்டையூர், கே. அழகாபுரியைச் சார்ந்தவர், இவரது தந்தை திரு. ஆர்.முனிரெத்தினம் அவர்கள் ஜவுளி கடையில் கணக்காளராகவும், தாயார் திருமதி மஞ்சுளா அவர்கள் அங்கன்வாடி பணியாளராகவும் உள்ளனர்.

தமிழ்நாட்டை சார்ந்த சர்வதேச செஸ் விளையாட்டு வீரர் செல்வன். மு. பிரனேஷ் அவர்கள் தனது 16–ஆவது வயதில் கிராண்ட் மாஸ்டர்

பட்டம் பெற்று சாதனை படைத்துள்ளார். இவர் இந்தியாவின் 79–ஆவது கிராண்ட் மாஸ்டர் ஆவார். கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெறும் தமிழ்நாட்டை சார்ந்த 28–ஆவது செஸ் வீரர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் 16 வயதிற்குட்பட்ட பிரிவுகளில், சர்வதேச கிராண்ட் மாஸ்டர் செஸ் –2020 (International Grand Master Chess Champion–2020) போட்டியில் தங்கம், ஸ்பெயின் நாட்டில் நடைபெற்ற சன்வேய்சிட்ஜஸ்–2021 கிராண்ட் மாஸ்டர் செஸ் விழா (Sunwaysitges Grand Master Chest Festival–Spain–2021) போட்டியில் வெள்ளி, இலங்கையில் நடைபெற்ற காமன்வெல்த் செஸ் சாம்பியன்ஷிப்–2022(Common Wealth Chess Championship–Srilanka–2022) போட்டியில் தங்கம், புது தில்லியில் நடைபெற்ற 2022–ஆசிய செஸ் (Asian Continental Chess Championship–New Delhi–2022) போட்டியில் வெண்கலம், மற்றும் ஸ்வீடன் ரில்டன் கோப்பை–2022 (Rilton Cup–Sweden–2022) செஸ் போட்டியில் தங்கம் வென்றுள்ளார்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மருத்துவர். கா.ப.கார்த்திகேயன், இ.ஆ.ப., மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in